# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
********

முறையீட்டு மனு எண்: 202//2018/பே
ஆணை நாள். 06–02–2019.

திருமதி. மு. சந்தனமாரி,
க/பெ திரு.முத்துலிங்கம்,
செல்வன்புதூர், அச்சன்குளம்,
கொட்டாரம் & ( அஞ்சல்,)
கன்னியாகுமரி மாவட்டம்–629703 –– முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
கொட்டாரம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்–629703. ––– எதிர் மனுதாரர்.

ஆணை.

திருமதி.M. சந்தனமாரி, க/பெ திரு.முத்துலிங்கம், செல்வன்புதூர், அச்சன்குளம், கொட்டாரம் & அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் என்பவரது 17.09.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.09.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.202/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தான் மேற்கண்ட விலாசத்தில் இரு பெண் குழந்தைகளுடன் வசித்து வருவதாகவும், தனது கணவர் செங்கல் சூளையில் கூலியாக பணிபுரிந்து வருவதாகவும், தனது குடும்ப வறுமையின் காரணமாக கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சியில் டெங்கு மஸ்தூர் என்ற கணக்கு எடுக்கும் பணிக்கு சுகாதாரத்துறை மற்றும் கொட்டாரம் பேரூராட்சி நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டதாகவும், கடந்த ஒன்றரை வருடமாக தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் பணிபுரிந்து வருவதாகவும், எந்தெந்த பகுதிக்கு பணிக்கு செல்லவேண்டும் என்பதை சுகாதாரத் துறை முடிவு செய்து, அதன் அடிப்படையில் பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த மூன்று மாதமாக பேரூராட்சி தனது பணியினை கணக்கிட்டு தனக்கு ஊதியம் வழங்கவில்லை எனவும், இது குறித்து பேரூராட்சி செயல் அலுவலரிடம் கேட்டதற்கு உரிய பதில் அளிக்காமல் விதிகளை மீறி தன்னை போன்ற மிகுந்த சிரமத்தில் வேலைக்கு செல்லும் பணியாளர்களை

செயல் அலுவலர் கஷ்டப்படுத்தி வருவதாகவும், மேற்படி பேரூராட்சியின் முன்னாள் கவுன்சிலர் திரு.பி.கணேசன் என்பவர் செயல் அலுவலருக்கு மிகவும் நெருக்கமானவர் எனவும், மேற்படி நபரின் செங்கல் சூளையில் தனது கணவர் பணிபுரிந்து வந்ததாகவும், அவருக்கும் தனது கணவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தனது கணவர் பணிக்கு செல்லவில்லை எனவும், இந்த முன் விரோதம் காரணமாக மேற்படி திரு.கணேசன் என்பவர் மேற்படி கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கூறியதின்பேரில் 17.09.2018 அன்று பணிக்கு சென்ற தன்னை பணிக்கு அனுமதிக்காமல் எவ்விதமான காரணமும் இன்றி மேற்படி பேரூராட்சியின் செயல் அலுவலர் தன்னை பணிக்கு வரக்கூடாது என தெரிவித்ததாகவும், தனக்கு சேரவேண்டிய பணமும் தனக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

28.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 22.10.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில் கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சிக்குட்பட்ட செல்வன்புதூர் பகுதியில் வசிக்கும் திருமதி.சந்தனமாரி என்பவர் டெங்கு மஸ்தூர் பணியாளராக கடந்த இரண்டு வருடமாக கொட்டாரம் பேரூராட்சியில் பணிபுரிந்து வந்ததாகவும், முதலில் நல்லமுறையில் தனது பணியில் வேலை செய்ததாகவும், கடந்த ஆறு மாதங்களில் மேற்படி நபர் பணிக்கு செல்லும் இடங்களில் பொதுமக்களிடம் அவதூறாக பேசியும் நல்ல நிலையில் உள்ள குடிநீரை கொட்டியும் அநாகரீகமாக நடந்துள்ளதாகவும், இதன் பொருட்டு கொட்டாரம் பேரூாட்சிக்குட்பட்ட பொதுமக்கள் பலமுறை வாய்மொழியாக புகார் அளித்துள்ளனர் எனவும், அதனடிப்படையில் முறையீட்டு மனுதாரரை நேரில் அழைத்து எச்சரித்த பின்னரும், மேலும், மேலும் இதே தவறினை செய்துள்ளதாகவும், மேற்படி நபர் எந்த வார்டுக்கு சென்றாலும் பேரூராட்சி பொதுமக்கள் அவரை தங்கள் வார்டுக்கு வர அனுமதிக்காதீர்கள் எனக் கூறியதின் அடிப்படையில், மேற்படி நபரை தான் பணியில் இருந்து நின்று விட கூறியதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் திருமதி.சந்தனமாரி, அளித்துள்ள புகார் மனு தவறானது எனவும், அவருக்கு வழங்கவேண்டிய 3 மாத நிலுவை ஊதியம் அவரது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டதாகவும் அதற்கான வங்கி ஆவண நகல்களை இணைத்துள்ளதாகவும் தனது அறிக்கையில் கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 02.11.2018 நாளிட்ட அறிவிப்பாணையில், கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், முறையீட்டு மனுதாரருக்கு ஊதியம் வழங்கப்பட்ட விவரம் மட்டுமே தெரிவிக்கப்பட்ட நிலையில், முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுக்களுக்கான விரிவான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டதின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலரின் 08.11.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில், முறையீட்டு மனுதாரர் திருமதி.சந்தனமாரி கொட்டாரம் பேரூராட்சியில் டெங்கு மஸ்தூர் பணியாளராக கடந்த 2 வருடங்களாக பணிபுரிந்து வந்ததாகவும், அவருக்கு பணிக்கு வரும் நாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் பணிக்கு வரும் நாட்களை கணக்கில் கொண்டு ஊதியம் வழங்கப்படுவதாகவும், இதற்காக அரசு தனி நிதி ஒதுக்காததால் பேரூராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதால் பேரூராட்சியின் நிதி நெருக்கடி காரணமாக இரண்டு மாதம் மூன்று

மாதத்திற்கொருமுறை பணி கணக்கிட்டு ஊதியம் வழங்கப்பட்டு வந்ததாகவும். இதனால் ஏற்பட்ட தாமதத்தினை புகார்தாரர் தெரிவித்துள்ளதாகவும், இதற்கு பேரூராட்சியின் நிதி நெருக்கடி காரணம் எனவும் தற்போது முறையீட்டு மனுதாரருக்கான ஊதியத்தினை நிலுவையின்றி அவரது கணக்கிற்கு செலுத்தப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளது போல் திரு.பி.கணேசன் என்பவர் முன்னாள் பேரூராட்சி 5–வது வார்டு உறுப்பினர் எனவும், மேற்படி முறையீட்டு மனுதாரரும் அதே வார்டை சார்ந்தவர் எனவும், மேற்படி முன்னாள் பேரூராட்சி உறுப்பினர் செங்கல் சூளை நடத்தி வருவதாகவும், அவரின் செங்கல் சூளையில் முறையீட்டு மனுதாரரின் கணவர் வேலை புரிந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் தனது வார்டு முன்னாள் உறுப்பினர் என்ற முறையிலும் கணவரின் தொழில் காரணமாக ஏதோ முன் விரோதம் கொண்டு தனது புகார் மனுவில் முன்னாள் வார்டு உறுப்பினரை பற்றி புகார் தெரிவித்துள்ளதாகவும். மற்றபடி புகார் மனுவில் புகார்தாரர் குறிப்பிட்டுள்ளபடி பேரூராட்சிக்கும், பேரூராட்சி முன்னாள் வார்டு உறுப்பிருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை எனவும், தன்னையும் முன்னாள் வார்டு உறுப்பினரையும் சேர்த்து ஒரு பொய்யான தகவலை முறையீட்டு மனுதாரர் அளித்துள்ளதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவத்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது பணிக்காலத்தில் செய்த தவறுகள் தொடர்பாக பல புகார்கள் தனக்கு எழுத்து மூலமாக வந்ததாகவும். அதில் அச்சன்குளத்தைச் சார்ந்த திருமதி கஸ்தூரிபாய், மற்றும் திருமதி.பாக்கியலட்சுமி மற்றும் பெரியவிளையை சேர்ந்த திருமதி டெய்சி என்பவர்களின் புகார்களின் அடிப்படையில் கடந்த 17.09.2018 அன்று பணிக்கு வந்த மேற்படி முறையீட்டு மனுதாரரிடம் கேட்டதற்கு விளக்கம் ஏதும் தராமல் தனக்கு இந்த பணி தேவையில்லை என எடுத்தெறிந்து பேசி பிரச்சினை செய்துவிட்டு அவரே தன்னிச்சையாக முடிவெடுத்து பணிக்கு வராமல் நின்று விட்டு, பொய்யான புகார் மனுவினை சமர்ப்பித்தள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தன் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வேண்டுமென்றே புனையப்பட்டது எனவும், மேற்படி முறையீட்டு மனுதாரரை பணிக்கு வரவேண்டாம் என எழுத்து மூலமாகவோ, வாய் மொழியாகவோ எதுவும் தெரிவிக்கவில்லை எனவும். அவராகவே பணிக்கு வராமல் சென்று விட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 16.11.2018 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர் மற்றும் கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 11.12.2018 நாளிட்ட கடிதத்தில் தான் மிகவும் ஏழ்மையில் இருப்பதாலும் தனது கணவர் மற்றும் பிற உறவுகளால் தனக்கு எந்த துணையும் இல்லாததாலும், தனக்கு படிப்பறிவு இல்லாததால் தன்னால் முகவரி அறிந்து மேற்படி 26.12.2018 நாளைய விசாரணைக்கு வர இயலாத நிலையில் உள்ளதால், அக்கடிதத்துடன் தான் இணைத்துள்ள எழுத்து பூர்வமான வாக்குமூலத்தினை பதிவு செய்யக் கோரி, தனது எழுத்து மூல வாக்குமூலத்தில், தான் கொட்டாரம் பேரூராட்சியில் டெங்கு மஸ்தூர் கணக்கெடுப்பு பணிக்கு சுகாதாரத்துறை மற்றும் பேரூராட்சி அதிகாரிகளால் பணியமர்த்தப்பட்டு கடந்த 1 1/2 வருடமாக பணிபுரிந்து வந்ததாகவும், நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் ஊதியமாக கொடுத்து வந்ததாகவும். இந்த பணம் மாதந்தோறும் கணக்கிட்டு வந்ததாகவும், அதனடிப்படையில் தான் எவ்வித புகாரும் இன்றி பணிபுரிந்து வந்ததாகவும், ஆனால் ஊதியம் வழங்கும் செயல் அலுவலர் முறையாக ஊதியத்தினை கணக்கிட்டு தராமலும், தன்னை போன்ற

பணியாளர்களை தனது பணி விதிகளை மீறி ஊதியம் தராமல் ஏசுவதும், உதாசீனப்படுத்துவதும் வாடிக்கை எனவும், இந்நிலையில் தனது கணவர் கொட்டாரம் பேரூராட்சியின் முன்னாள் 5—வது வார்டு உறுப்பினர் திரு.பி.கணேசன் என்பவருடன் ஏற்பட்ட பிரச்சினையால் முன் விரோதம் கொண்டு, மேற்படி முன்னாள் வார்டு உறுப்பினர் எப்போதும் பேரூராட்சியில், பேரூராட்சி செயல் அலுவலருடன்ஒன்றாய் இருப்பதால் அதனை பயன்படுத்தி 17.09.2018 அன்று பணிக்குச் சென்ற தன்னை பேரூராட்சியின் செயல் அலுவலர் எவ்விதமான கேள்வியும், விசாரணையுமின்றி தன்னை பணிக்கு அனுமதிக்காமல் திருப்பி அனுப்பி விட்டதாகவும், காரணம் கேட்டால் தான் தான் அதிகாரி, தனது வாய்மொழி உத்திரவின்படி நடக்கவேண்டும் எனவும் தனது பணி விதிகளை மீறி தனக்கு சேரவேண்டிய பணத்தையும் தராமல் தன்னை அவமானப்படுத்தி மேற்படி செயல் அலுவலர் தனது பணி விதிகளை மீறி நடந்துள்ளதாகவும், பொதுமக்களிடமும், மற்றும் டெங்கு மஸ்தூர் பணியாளர்களிடமும், தன் மீதும் முன் தேதியிட்டு பொய்யான புகார் மனுவினை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பணி மாறுதலான முன்னாள் சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் முன் தேதியிட்டு தன் மீது புகார் மனு பெற்றுள்ளதாகவும், புதிதாக டெங்கு மஸ்தூர் பணிக்கு 5 நபர்களை தேர்வு செய்து பணியமர்த்தியுள்ளதாகவும், தான் புகார் கொடுத்து விசாரிக்கப்பட்டதும் தனது வங்கி கணக்கிற்கு தனது முன்பாக்கி ஊதியத் தொகையினை செலுத்தியுள்ளதாகவும், செயல் அலுவலர் தனது வாய்மொழியின் உத்திரவின்படி தன்னை பணிக்கு அனுமதிக்காமலும், தான் தனது விருப்பப்படி பணிக்கு செல்லவில்லை என பொய்யான பதில் அளித்துள்ளதாகவும், தான் தற்போதும் மேற்படி பணிக்கு செல்ல தயாராக உள்ளதாகவும் தெரிவித்து இந்த வாக்குமூலத்தினை பதிவு செய்து தனக்கு நீதி வழங்க கோரியும் தனது பணி குறித்த சான்றுகளையும் இணைத்துள்ளார்.

20.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் 17.09.2018 நாளிட்ட முறையீட்டு மனுவினைத் தொடர்ந்து பெறப்பட்ட 11.12.2018 நாளிட்ட கடிதத்தின்படி முறையீட்டு மனுதாரரை கொட்டாரம் பேரூராட்சியில் டெங்கு மஸ்தூராக பணியமர்த்தப்பட்ட பணி ஆணையின் ஒளி நகலினை இம்முறை நடுவத்திற்கு அனுப்பி வைக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திருமதி.சந்தனமாரி தனது 27.12.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி டெங்கு மஸ்தூர் பணிக்கான விருப்பம் உள்ளவர்கள் கொட்டாரம் சுகாதாரத்துறை ஆய்வாளரிடம் பெயர் விவரம் கொடுத்து வாய் மொழி உத்திரவின்பேரில் கொட்டாரம் பேரூராட்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் எனவும், பேரூராட்சியின் செயல் அலுவலர் தங்களின் பெயர் விவரங்களை பதிவு செய்து கொண்டு பணியமர்த்துவார் எனவும், இதற்கான எழுத்து பூர்வமான உத்திரவு எதுவும் கிடையாது எனவும் அதே போன்று தான் 26.06.2017 முதல் பணிக்கு அமர்த்தப்பட்டு மேற்படி செயல் அலவலர் தனது பெயரை பதிவு செய்து வருகைப் பதிவேடு பேணி அதன்படி தான் பணிபுரிந்து வந்ததாகவும், 15.09.2018 அன்று பணிக்கு வரக்கூடாது என வாய் மொழியாக செயல் அலுவலர் உத்திரவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

20.12.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி 29.01.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.பா.சுந்தரேசன் தனது வாக்குமூலத்தில் தான் கொட்டாரம் பேரூராட்சியில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக பணிபுரிவதாகவும், திருமதி.சந்தனமாரி என்பவருடைய 17.09.2018 நாளிட்ட முறையீட்டு மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், திருமதி.சந்தனமாரி, டெங்கு

ஒழிப்பு பணிக்காக தினக்கூலியாக பணியமர்த்தப்பட்டதாகவும், கொட்டாரம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பாக டெங்கு ஒழிப்பு பணிக்காக மஸ்துார் தேர்வு செய்யப்பட்டு, பணிக்காக பேரூராட்சிக்கு அனுப்புவார்கள் எனவும், மாத இறுதியில் ஆரம்ப சுகாதார நிலைய பொறுப்பு மருத்துவ அலுவலரின் வருகைச் சான்று பெற்று அதனடிப்படையில் மாதாந்திர ஊதியத் தொகை பேரூராட்சி நிதியில் இருந்து வழங்கப்படும் எனவும், எல்லா மாதத்திலும் அவர்களுக்கு பணி கிடையாது எனவும், கொசு உற்பத்தி ஆகும் காலங்களில் மட்டும் இவர்களை அனுப்புவார்கள் எனவும் மற்ற காலங்களில் அவர்களின் சொந்த வேலைகளை கவனிப்பார்கள் எனவும், முறையீட்டு மனுதாரர் திருமதி.சந்தனமாரி பொதுமக்களிடம் சரியாக நடந்து கொள்ளாத நிலை குறித்து புகார் வரப்பெற்றதின் அடிப்படையில் தான் அவரை கண்டித்ததாகவும், அதனைத் தொடர்ந்து அவர் தானாகவே பணிக்கு வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து 7 நபர்களை மஸ்துார் பணிக்கு அனுப்பியதாகவும், அதில் முறையீட்டு மனுதாரர் பணியில் இருந்து நின்று விட்டதால் தற்போது 6 நபர்கள் வேலை செய்வதாகவும், முறையீட்டு மனுதாரருக்கு சேரவேண்டிய 3 மாத நிலுவைத் தொகையினை வங்கி கணக்கு மூலம் கொடுத்து விட்டதாகவும். மனுதாரர் மட்டுமின்றி மற்ற 6 நபர்களுக்கும் பொது நிதியில், நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதால் உரிய காலத்தில் தொகை வழங்கவில்லையெனவும், தற்போது அனைவருக்கும் தொகை வழங்கப்பட்டுவிட்டதாகவும், கொட்டாரம் ஆரம்ப சுகாதார நிலைய சுகாதார மேற்பார்வையாளர் திரு.வர்கீஸ் ராஜாவும் திருமதி.சந்தனமாரியை பணியில் சிரத்தையுடன் பணிபுரியவில்லை என கண்டித்ததாகவும், தற்போது முறையீட்டு மனுதாரர் தன்னையோ அல்லது ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர்களையோ மீண்டும் வேலை வேண்டும் என அணுகவில்லை எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள திரு.கணேசன் என்பவர் முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் எனவும், அவர் வீட்டு வரி, குடிநீர் வரி போன்றவற்றினை செலுத்த பேரூராட்சிக்கு வருவார் எனவும் தங்களுடைய நட்பின் அடிப்படையில் வருவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். திருமதி.சந்தனமாரியும், திரு.கணேசன் என்பவரும் பக்கத்து பக்கத்து ஊர்க்காரர்கள் எனவும், அவர்களுக்குள் கருத்து வேற்றுமை உண்டு எனவும் தெரிவித்துள்ளதுடன், முறையீட்டு மனுதாரர் தனது மனுவுடன் இணைத்துள்ள சான்றினை தற்போது 2011 முதல் 2016 வரை இருந்த பேரூராட்சி மன்றத் தலைவரிடமிருந்து பெற்று அளிக்காமல் அதற்கு முன்னர் 1996–2001 வரை பதவியில் இருந்த பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு.யோபு என்பவரிடம் சான்று பெற்று அனுப்பியுள்ளார் எனவும் திரு.யோபு என்பவருக்கும் 2011–2016 வரை பேரூராட்சித் தலைவராக இருந்த திரு. பூவன்பிள்ளை என்பவருக்கும் தகறாரு உண்டு எனவும். இதன் பொருட்டு திரு.யோபு என்பவரிடம் சான்று பெற்று அனுப்பியுள்ளதாகவும், மற்றொரு சான்றான தலைமை ஆசிரியரின் சான்றினை பொறுத்த மட்டில் இச்சான்று அளித்துள்ள தலைமை ஆசிரியை அச்சன்குளம் அரசு துவக்கப்பள்ளியில் பணிபுரியும் தலைமை ஆசிரியரால் வழங்கப்பட்டது எனவும், அப்பள்ளி முறையீட்டு மனுதாரரின் வீட்டின் அருகில் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சியினை பொறுத்தவரை ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் பெறப்படும் பட்டியலில் உள்ள பணியாளர்களிடம் வேலை வாங்கி, ஆரம்ப சுகதார நிலைய வருகைப் பதிவேடு மற்றும் சான்றின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதாகவும், ஆரம்ப சுகாதார நிலைய பரிந்துரையுடன் மீண்டும் முறையீட்டு மனுதாரர் பணிக்கு வந்தால் அவருக்கு வேலை கொடுப்பதில் தனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள், முறையீட்டு மனுதாரரின் எழுத்து மூலமான வாக்குமூலம் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தான் கொட்டாரம் ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர்களின் பரிந்துரையின்பேரில் கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலரை அணுகி அவரின் வாய்மொழி உத்திரவின்படி பணி மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார். இதனை பேரூராட்சி செயல் அலுவலரும் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் உறுதி செய்துள்ளார். மேலும், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் கொட்டாரம் ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர்களின் பரிந்துரையுடன் வரும் பட்சததில் மேற்படி நபரை பணியில் சேர்த்துக் கொள்ள பேரூராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என தெரிவித்துள்ளதின் அடிப்படையில் முறையீட்டு மனுதாரர் கொட்டாரம் ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரிகளை அணுகி அவரது பணி வாய்ப்பு கோரிக்கைத் தொடர்பாக உரிய தீர்வு காணத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 06 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்.

1.திருமதி. மு. சந்தனமாரி,
க/பெ திரு.முத்துலிங்கம்,
செல்வன்புதூர், அச்சன்குளம்,
கொட்டாரம் (அஞ்சல்),
கன்னியாகுமரி மாவட்டம்–629703.

2.செயல் அலுவலர்,
கொட்டாரம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் – 629703.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்

நகல்

மாணபுமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலாளரின் தனி எழுத்தர்.
உராட்சிப் பிரிவு உதவிப் பிரிவு அலுவலர்.